RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2244s244

# போகர் சித்தரின் சமயத் தத்துவம்

ரா. காந்திமதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, அரச்சலூர்-638101, தமிழ்நாடு, இந்தியா

# The Religious Philosophy of Bhogar Siddhar

R. Gandhimathi [a, *]

[a] Department of Tamil, Navarasam Arts and Science College for Women, Arachalur-638101, Tamil Nadu, India

* Corresponding Author: phdgandhimathi@gmail.com

Received: 30-08-2022
Revised: 30-10-2022
Accepted: 07-11-2022
Published: 15-12-2022

Check for updates

**ABSTRACT**

Devotees are religious people. They are attached to shastras and rituals. They believe in deities, holy sites, sacred water, etc. They go to every temple, sing, and get excited. Azhwars, Nayanmars, etc., can be subsumed into the categories of devotees. The Siddhas are those who have attained the highest spiritual power. Attainment of spiritual power means being happy. Most human beings are associated with religion in one way or another. Religion is the way to engage with God. Not all people think of God in the same way. That is why different religions arose. Therefore, the divine thinkers can be divided into two types: devotees and Siddhas. This article examines the philosophy of God as propounded by the Siddhas.

**Keywords:** Devotees, Bhogar Siddhar, Spiritual Power, Religion

## முன்னுரை

பக்தர் என்போர் சமயம் சார்ந்தவர்கள். சாத்திரங்களிலும் சடங்குகளிலும் பற்று கொண்டவர்கள். இவர்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்றில் நம்பிக்கை கொண்டவர்கள். கோயில்கள் தோறும் சென்று பாடிப் பரவசமடையும் பண்புடையவர்கள். ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியோர் பக்தர்கள் என்னும் பிரிவுள் அடக்கலாம். சித்தர்கள் என்போர் உயர்ந்த சித்தி அடைந்தவர்கள். சித்தி அடைதல் என்றால் பெற்று மகிழ்தல் என்பது பொருள்.

இரச வாதம் கூடியவர்கள் வாத சித்தியாளர், பஞ்ச பூதங்களையும் வென்றவர்கள் பூத சித்தியாளர். இவ்வகையில் தமிழகத்துச் சித்தர்கள் மனம், வாக்கு, காயம் முதலிய சித்தி பெற்றவர்கள். இவர்கள் சடங்கு, சம்பிரதாயங்கள், உருவ வழிபாடு, கோயில் குளம், முதலியனவற்றில் பற்றில்லாதவர்கள், அவற்றைச் சாடியவர்கள், அனைத்து உயிர்கள் மாட்டும் அன்பு ஒன்றே உயர்ந்தது என்னும் கொள்கையாளர்கள். அவர்கள் சமயத்தைப் பற்றிக் கூறும் சிந்தனைகளை இங்குக் காணலாம். சாதாரண மனிதனால் முடியாதனவற்றை சித்தர்களால் எளிதில் சாதிக்க முடியும். தெளிந்த மனமும், கூர்ந்த அறிவும் பெற்றவர்கள் என்பதை,

“சீரிலுயர் அட்ட சித்தியார்க்கும்

சித்திக்கு மே சிவன் செயலினால்” (Venugopala Pillai, 1956)

“சூரியான சிவயோகம் சித்தியாச்சு” (Sitheswarar, 2016)

முதலிய சான்றுகள் நமது கருத்துக்குத் துணையாகிறது.

அண்டம், பிண்டம் ஆகியவற்றின் அறிவு பெற்றவர்கள் ஞானியர். இறப்பு, நிகழ்வு, எதிர்வு, ஆகிய முக்காலமும் அறிந்தோர் ரிஷிகள், திரிடி என்பதன் அடியாகப் பிறந்த சொல்லே ரி~p என்பது. உலகியலை முனிந்தவர்கள் முனிவர்கள், வெறுத்தல் என்றும் பொருள்படும் முனிவு என்னும் சொல்லினின்று பிறந்தது. எனவே ஞானியர், ரிஷிகள், முனிவர்கள் முதலியன பக்தர்கள் என்னும் பிரிவினுள் அடக்குதல் கூடும்.

போகரிஷி, போகமுனி எனப்பலராலும், ரிஷி, முனி என்ற பிரிவினுள் குறிக்கப்பட்டாலும் இவரைத் தமிழகத்துப் புகழ்பெற்ற பதினெண் சித்தர்களில் ஒருவராகக் குறித்து வரும் மரபு பண்டு தொட்டு இருந்து வருகிறது. ஆதலின் இவரைச் சித்தர் பிரிவினுள் அடக்கிக் காண்பது பொருந்தும், இவரது பாடல்களை ஊன்றி ஆராயும் போது சில இடங்களில் காணப் பெறும் குறிப்புகள் இவரைப் பதினெண்மரில் வேறானவரோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.

“சேர்த்ததொரு பதினெண்பேர் சித்தர்தாமும்

சிறப்புடனே தெளிந்து பார்த்தேன்” (Ramaiyar, 1979)

“சிங்கமாம் பதினெண்பேர் சித்துதன்னில்

சீடனாம் அகத்தியர்க்கு உகந்தசித்தே” (Ramaiyar, 1979)

முதலியன சில என்றாலும் புகழ் பெற்றத் தமிழகச் சித்தர்களில் ஒருவர் என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை. தமிழ்ச் சித்தர்கள் பாடல்களில் காணப்பெறும் யோக மார்க்கம், சாதிசமயம், சடங்கு, உருவவழிபாடு. சாத்திரம் முதலியனவற்றைச் சாடுதல் முதலியன பரவலாகக் கூறப் பெற்றுள்ளன. எனவே சித்தர் என்ற வகையில் போகர் 7000 நூல்வழி இவரது சமயத் தத்துவம் பற்றிய கொள்கையைக் காணலாம்.

## தத்துவ விளக்கங்கள்

தத்துவம் என்ற சொல் தத், துவம் எனப் பிரிக்கப்பெறும். இதில் வரும் தத் என்பது அது என்றும், துவம் என்பது தன்மை என்றும் பொருள்படும். ஆகவே, தத்துவம் என்பது அதன் தன்மை என்றாகும். அதன் தன்மையாவது, உண்மையின் தன்மையாகும். உண்மை கடவுள் (Kandhasamy, 1976). தத்துவம் என்பதற்கு இணையாக மெய்ப்பொருள், சமயக்கணக்கு என்ற குறியீடுகள் தமிழிலக்கியங்களில் காணப்படுகின்றன. மெய்ப்பொருளென்பது உண்மைகளைக் காண்பதற்குக் கருவியாகப் பயன்படும் அளவை துருவிக் கண்ட உண்மைப் பொருளையும் உணர்த்துகிறது.

பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்ம்மையினை நிலைநாட்டும் அறிவுக்கலை இது பொய்ப்பொருளிலிருந்து மெய்ப்பொருளைக் காண்பதற்குத் துணை செய்யும் துறை என்றும் இதனை உரைப்பர். ஆகவே தத்துவத்திற்கு உண்மை என்றும், உண்மையை அறியும் கருவி என்றும் பொருள் கொள்ள வேண்டியுள்ளது. உண்மை விளக்கம், உண்மை நெறி விளக்கம் எனச் சாத்திர நூல்கள் பெயர் பெற்றுள்ளமை இங்குக் குறிக்கத்தக்கது.

## போகரின் கடவுள் தத்துவம்

சித்தர்கள் யோக மார்க்கிகள் அண்டம், பிண்டம் ஆகியவற்றின் ரகசியங்களை அறிந்து யோகப் பயிற்சியால் அனைத்து ஆற்றலும் பெற்றவர்கள். இவ்வகையில் இவர்கள் சிவனைக் குருவாகவும், முழு முதல் தெய்வமாகவும் கொண்டவர்கள். இவர் தவிர பிற தெய்வங்களை யெல்லாம் தூற்றுபவர் இல்லை எனினும் போற்றுபவர் இல்லை. இவர்கள் சிறுதெய்வம் அல்லது கிராம தேவதை எனக்குறிக்கப்பெறும் அற்ப சித்தி பெற்று காலப் போக்கில் தெய்வங்களாக மதிக்கப்பெற்ற கறுவீரன், சிறுசின்னி, சின்னான், கருப்பண்ணன், மாடன், பாவாடைராயன், முதலிய ஆண் தேவதைகளையும், சப்தகன்னியர், சமானவீறி, பிடாரி, முதலிய பெண் தேவதைகளையும் வணங்குவதைச் சாடியுள்ளார்.

“காணவே ஜெபதபத்தில் இருந்து கொண்டு

கருவான பிராணவத்தை உச்சரித்தால்

பூணவே ஏவல்பில்லி சூனியங்கள்

பொல்லாத கருப்பண்ணன் ஏவல் சண்டி

தோணவே பாவாடைராயன் காத்தன்

தோறாத பிரணவத்தால் எல்லாம் சித்தி

வேணவே மாடனது வசியத்தாலே

வெட்டவெளி தேவதைகள் கைக்குள்ளாச்சே"

என்கிறார் (Ramaiyar, 1979). இச்சிறு தேவதைகளை நமது கைக்குடைபட்ட கொள்ள முடியும், அவர்கள் வணக்கத்துக்குரியன என்பது போகரது கருத்து .

இம்மனிதப் பிறப்பு எடுத்ததன் நோக்கம் ஆன்ம அடைவதே அதாவது பிறப்பு இறப்பு அற்றிருத்தலாகும். இந்த நோக்கம் நிறைவேறச் செயல்படும் போது எதிர்ப்படும் அறிவு சித்துக்களுக்கு ஆசைப்பட்டு யட்சனி அறிவுரை. ஏழாயிரத்தில் தேவதைகள் உபாசனையுடன் நிறைவு அடைதல் கூ என்பதே சித்தர்களது உயரிய சிவபூசை, சிவகாமி பூசை, நடுச்சாமி பூசை, மயேஸ்வரி பூசை மயான பூசை முதலிய பலபூசை முறைகளைப் பற்றியும் பல்வேறு தேவர்களையும், தேவதைகளையும் வசியப்படுத்தும். மந்திர முறைகளையும் விரிவாகக் காணலாம். இருப்பினும் போகரது தெளிந்த கருத்து தெய்வம் ஒன்று என்பதே.

"முனையான தெய்வமது ஒன்று உண்டு

பாச்சலுடன் பலபேரு மறியவல்லோ

பண்பாகப் பொதுப்படவே சொன்னாரங்கே

ஆச்சரிய மானபரா வஸ்துதன்னை

அன்புடனே கண்டறிந்தோ ரில்லைபாரே"

எனவரும் பாடல் அடிகள் நமது கருத்துக்குத்துணை செய்வன. அந்தத் தெய்வத்தின் கருணையன்றி அணுவும் அசையாது என்பதும் அவர் கருத்து (Ramaiyar, 1979).

"பையவே யவரின்றி அணுவுந்தான்

பாருலகில் அசையாது மெய்யதாமே"

"தானான அம்மனது காளியென்றும்

தாக்கான வேல்முருகன் தானென்றும்

சோனான சடைமுனி தானென்றும்

குறிப்பான காட்டேரி தானென்றும்

தேனான வேங்கட பதிதானென்றும்

மகத்தான அனேகவித தெய்வம் பாரே"

என வரும் பாடல் வரிகளிலும்,

"இப்படியே கோடான கோடிநாமம்

எழிலான சாத்திரங்கள் சொல்லலாச்சே"

"சீரப்பா நாமமது மூன்றுமல்லோ

சிறப்பான கடவுளுக்குப் பேருமாச்சு

தேரப்பா மதசாதி தேசமெல்லாம்

செப்பினார் பலநூலும் சொன்னார்தாமே"

என வரும் பாடல் வரிகளிலும், இவரது கடவுட் கொள்கை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது (Ramaiyar, 1979).

“அத்தமாம் கணபதி என்ற நாமம் அவனிதனில் மனிதரல்லால் வேறல்லர்"

“நாமேதானு சொன்னபடி வடிவேலர்தான் நாட்டினிலே இருந்தாரோ"

என வரும் வரிகள் அக்கருத்துக்குத் துணை செய்வன (Ramaiyar, 1979).

இன்றைய உலகில் மக்கள் தெய்வம் என்று வணங்கும் விநாயகன், சுப்பிரமணியர், காளி, ஹரி, அயன், பிரம்மன் முதலிய எவருமே தெய்வமல்லர். அவர்கள் அனைவரும் தெய்வநிலை பெற்றவர்கள். சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் ஆகிய நான்கு நிலைகளில் அவர்கள் சாயுச்சிய நிலை பெற்றவர்கள். இவர்கள் அனைவர்க்கும் மேலே அண்ட மாய் அவனியாய் அனைத்துமாய் பரிணமிக்கும் சத்தி ஒன்றே. அதுவே அனைத்திலும் தங்கியிருக்கும் இறையாகும். அனைத்தும் கடந்து நிற்கும் கடவுளாகும். இவ்வுண்மையைப் புரிந்து கொள்ளாது சாயுச்சிய நிலை பெற்றவரையும், சாரூப நிலை பெற்றவரையும், சாமீப நிலைபெற்றவரையும், சாலோக நிலை பெற்றவரையும் தெய்வமெனக் கொண்டாடுகின்றனரே எனப் போகர் வருந்துகிறார்.

“மடிந்தாரே வையகத்து மாண்பரெல்லாம்

தேவர் கடவுளது ஏமவித்தை

கடிந்ததொரு பொருளறிய மாட்டாமற்றான்

காசினியில் வெகு மாண்பர் மாண்டாரப்பா"

என வரும் வரிகளிலும்,

“கல்லு தெய்வம் பேசுமென்று கையெடுத்து

காசினியில் கதையுரைத்த காட்சியாமே"

எனவரும் வரிகளிலும் அவ்வருத்தம் புலனாகின்றது (Ramaiyar, 1979).

## போகர் சாடுவன

மக்கள் இனத்தைக் கூறு போட்டு ஒற்றுமையைக் குலைக்கும் அனைத்தையும் சித்தர்கள் சாடினர். இவை அனைத்தும் மனிதன் தானாகக் கற்பித்துக் கொண்டவை. அவற்றுள் பல்வேறு தெய்வங்களைப் பற்றிப் பொய்யான செய்திகளைக் கூறி மக்களை அல்வழிப்படுத்திய சாத்திரங்களை முதன்மையாகச் சாடினார்.

"நேரேதான் சாத்திரத்தை விட்டகற்றி

நேர்மையுடன் மதியூன்றிப் பாராமல்

பூராயமான தொருரி~pகள் நூலில்

புகன்றிட்ட மர்மமதை அறியாமல்"

என வரும் வரிகளும்,

“பலவகையாம் சாத்திரங்கள் பலவும் பார்த்துப்

பாரினிலே கெட்டவர்கள் கோடாகோடி”

என வரும் வரிகளும்.

"உண்டான சாத்திரங்கள் பேதா பேதம்

உத்தமனே பாடிவைத்தோர் அனேகமுண்டு

சண்டான முறைகெட்டு சாத்திரங்கள்

செப்பினார் பலபேதை மாண்பர்தாமே"

என வரும் வரிகளும்,

"வாசித்து நால்வேதம் ஆறுசாத்திரம்

வகையுடனே கதைகட்டி வுரைத்திட்டாரே"

என வரும் வரிகளும் ஏழாயிரத்தின் வழி போகர் சாத்திரங்களைச் சாடியதற்குச் சான்று பகர்வன. இனிச் சாத்திரங்களுடன் சமயங்களும் மதங்களும் சாடுதற்குரியன (Ramaiyar, 1979).

"தெளிவான மதபேதம் கூறியல்லோ

நீட்டமுடன் மாண்பரெல்லாம் இந்தப்பாகம்

நீதிகெட்டு மதிகெட்டாரே"

பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையின் அனைத்துச் செயல்களும் அனைவர்க்கும் ஒன்றே என்பதையும் அனைவர் உடம்பின் உறுப்புக்களும் உள் ஓடும் குருதியும் ஒன்றே என்பதையும் மறந்து தமக்குள் பேதங்களைக் கற்பித்துக் கொண்டு மதியையும் நிதியையும் இழந்து துன்பப்படுகின்ற மக்கள் நிலையை நினைத்து மேற்காட்டிய வரிகளில் தமது வருத்தத்தைப் புலப்படுத்துகின்றார் (Ramaiyar, 1979).

"கேள்வியுற்ற சமயமெல்லாம் பொய்யென்று தள்ளு"

இவ்வரியில் சமயங்களில் பற்று கூடாது என அறிவுரை கூறுகிறார் (Ramaiyar, 1979).

சமயங்களும், மதங்களும் மக்களின் நம்பிக்கையைப் பொறுத்துச் சமுதாயத்தில் வளர்வன. இவற்றை ஒட்டி நல்ல நாள், கெட்ட நாள், நல்ல நேரம், கெட்ட நேரம், வாரசூலை முதலிய நம்பிக்கைகளும் மக்கள் மத்தியில் இடம் பெற்று உள்ளன.

"ஆமேதான் கெட்டநாள் நல்லநாளாய்

ஆகவைக்க உன்னாலே ஆகுமோதான்

போமேதான் கதிரோனின் நாளையெல்லாம்

பொங்கமுடன் நல்லநாள் என்றிருக்க"

இது போகரின் அறிவுரை (Ramaiyar, 1979). சோதிடம் பார்த்தல் முதலியன அனைத்துமே பயனற்றவை. இயற்கையாய் அமையும் எதையுமே மாற்றும் திறன் சராசரி மனிதனுக்குக் கிடையாது. வெள்ளத்தின் வழியே ஏகும் ஓடம் போன்றதே மனிதனின் நிலை என்பதை உணர்த்தல் வேண்டும். பொதுவாக எல்லாத்து தமிழ்ச் சித்தர்களின் பாடல்களிலும் இந்தக் கருத்தை காணலாம். எந்த நாட்டைச் சார்ந்த மனிதனாக இருந்தாலும் அச்சத்தின் விளைவாகவோ, அவசியத்தின் காரணமாகவோ ஏதேனும் ஒரு நம்பிக்கையால் ஆளப்பெற்றிருப்பான். இவ் வகையில் மறுபிறப்பு நம்பிக்கை ஏறக்குறைய புகழ் பெற்ற சமயங்களில் எல்லாம் உள்ளது. இறந்தவர் உடம்பை புதைப் பதன் நோக்கமும் மறுபிறப்புக் கொள்கையின் அடிப்படையே யாகும். கிருத்துவம், சைவம், முகமதியம் முதலிய சமயங்கள் சமாதியை வலியுறுத்துவன. உடம்பை எரிப்பதை எதிர்பர் எரித்து விட்டால் மறுபிறப்புக்கு வாய்ப்பில்லை என்றும் ஆன்மா அலையும் என்றும் நம்புகின்றனர்.

மனிதன் தனது அறிவாலும் ஆற்றலாலும் யோகம் முதலியன பயின்றும் கல்பம் முதலியன உட்கொண்டும் காலம் கடந்து நினைக்கும் காலம் வரை வாழ்தல் கூடும், எனினும் பஞ்ச பூதத்தால் ஆகிய இவ்வுடல் என்றாவது ஒருநாள் அழியும் தகைமையதே.

'சாவதும் என்றைக்கும் நிச்சயம்தான்

சாங்கமுடன் பலதொழிலும் கற்றுமென்ன

போவது மெய்யல்லால் இருப்பதில்லை

பொங்கமுடன் வையகத்து வாழ்க்கையாமே"

என்பதே போகரது முடிவான கருத்தாகும் (Ramaiyar, 1979). 'முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பலாவார்' என்பதும் மனிதரால் செய்ய முடியாத செயல் எதுவும் இல்லை. திக்கு எட்டும் ஆளுதல் கூடும், ஏழு கடலையும் கடத்தல் கூடும், நீர்மேல் நடத்தல் கூடும். கொடிய மிருகங்களையும் வசியம் செய்து ஏவல் கேட்கச் செய்தல் கூடும். பட்சிகளைப் பிடித்து வந்து பேச்சினைக் கற்றுத் தருதல் கூடும், நச்சுமிகுந்த பாம்புகளைப் பிடித்து நம் விருப்பப்படி ஆட்டுதல் கூடும், இப்படிச் செய்தற்கரிய செயல்களைச் செய்துமென்னலாபம் முடிவில் என்றைக்காவது ஒருநாள் இந்த தேகத்தை மண்ணில் புதைக்கச் செய்வார்களே என ஆதங்கப்படுகிறார் போகர்.

'நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்

பெருமையுடைத்து இவ்வுலகு'

என்பது வள்ளுவர் வாக்கு.

"தானான லோகமதில் எல்லாம் பொய்யே

சட்டமுடன் இருந்தவர்கள் யாருமில்லை

கோனான குருசொன்ன நூலும் பொய்யே

குவலயமும் ஒருகாலம் அழிந்துபோம்

தேனான சப்தசாகரமும் தானப்பா

நிறைமேரு வரைகாணா தாகிப்போம்

பானான உலகமது அழிந்து போகும்

பாருலகில் கண்டவர்கள் இல்லைதானே"

"இருந்தாலும் தேகமது நிலை நில்லாது

எழிலான காயமது மண்ணாய்ப் போகும்

குருந்தவே காயாதி கொண்டிட்டாலும்

கொப்பெனவே மண்ணோடே மண்ணாய்ப் போம்"

யாக்கை, உலகம் முதலியன நிலையில்லாதன என்னும் போகரின் கோட்பாட்டிற்குச் சில சான்றுகள் காட்டப்பெற்றன (Ramaiyar, 1979). இனி, இவ்வுடலும் உலகமும் பஞ்சபூதங்களின் சேர்க்கையாகும். இவ்வுடல் அழிகின்றபோது அந்த அந்தப் பூதங்கள் அதில் அதில் ஐக்கியமாகிவிடும் என்பதும் போகரின் கருத்து.

## முடிவுரை

சித்தர்கள், சிவனைக் குருவாகவும், முழு முதல் தெய்வமாகவும் கொண்டவர்கள். இவர் தவிர பிற தெய்வங்களை யெல்லாம் தூற்றுபவர் இல்லை எனினும் போற்றுபவர் இல்லை. இவர்கள் சிறுதெய்வம் அல்லது கிராம தேவதை எனக்குறிக்கப்பெறும் அற்ப சித்தி பெற்று காலப் போக்கில் தெய்வங்களாக மதிக்கப்பெற்ற கறுவீரன், சிறுசின்னி, சின்னான், கருப்பண்ணன், மாடன், பாவாடைராயன், முதலிய ஆண் தேவதைகளையும், சப்தகன்னியர், சமானவீறி, பிடாரி, முதலிய பெண் தேவதைகளையும் வணங்குவதைச் சாடியுள்ளார். இவ்வுடல் அழிகின்றபோது அந்த அந்தப் பூதங்கள் அதில் அதில் ஐக்கியமாகிவிடும் என்பதும் போகரின் கருத்து. சமயங்களும், மதங்களும் மக்களின்

நம்பிக்கையைப் பொறுத்துச் சமுதாயத்தில் வளர்வன. இவற்றை ஒட்டி நல்ல நாள், கெட்ட நாள், நல்ல நேரம், கெட்ட நேரம், வாரசூலை முதலிய நம்பிக்கைகளும் மக்கள் மத்தியில் இடம் பெற்று உள்ளன.

## References


Kandhasamy, S.N. (1976) Tamilum Thathuvavum, Manivasakar Pathippagam, Chennai, India.

Ramaiyar, S.A.A. (1979) Bogar Ezhayiram Kaandam, Kiriya Babasi Sangam, Chennai, India

Sithheswarar, (2016) Nijantha Botham, Sithhar Nanakovai, Sithhayoga Araichi Maiyam, Chennai, India.

Venugopala Pillai, (1956) Kaduveli Sithhar, Sithhar Nanakovai, 2nd Ed, Appathurai Publication, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License